Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.447/2022

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாரதி | Occupation | வனவர் |
| Father's name | கருப்பசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

16.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி வனச்சரகத்தில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் வனச்சரகத்தில் புதுப்பட்டி பிரிவு வனவராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் பிரிவை கூடுதல் பொறுப்பாக பார்த்தபோது 13.11.2021 அன்று இரவு 10.30 மணியளவில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பெருமாள்பட்டி நாடார் தெருவைசேர்ந்த மாரியப்பன் மகன் கருத்தப்பாண்டி அவரது தோப்பில் உடும்பு வேட்டையாடி அதன் தோளை பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கிடைத்தது. நானும் ரெங்கர்தீர்த்தம் பீட் வனக்காப்பாளர் பெரியசாமி மற்றும் சிமி மோப்பநாய், ரெங்கர் கோவில் பீட் வனக்காப்பாளர் லட்சுமி, மற்றும் கடற்கரைவேல் வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியோர் சம்மந்தப்பட்ட எதிரியை அழைத்துக்கொண்டு சம்பவயிடத்திற்கு சென்று தணிக்கை செய்கையில் 3 உடும்பு தோள், 2 தலைகள், தோட்டத்தில் மண்ணிற்கு கீழ் புதைத்து வைத்திருந்ததை கண்டெடுக்கப்பட்டு அவரிடம் விசாரித்ததில் 11.11.2021 அன்று இரவில் தோப்பிற்கு வந்த 3 உடும்பை வேட்டையாடியதாக கூறினார். அந்த தோப்பானது வழுக்குமண்டை அய்யனார் என்பவரது இடத்தை குத்தகைக்கு எடுத்து பராமரித்து வருவதாகவும் கூறினார். உடும்பு கறி மருத்துவ குணமுள்ளது என்பதால் அதை வேட்டையாடி

தோளை உரித்து மண்ணிற்குள் புதைத்து வைத்ததாகவும் ஒரு தலையை நாய்க்கு போட்டுவிட்டதாகவும் கூறினார். சம்பவயிடத்திற்கு வெங்கடேஸ்வராபுரம் கிராம நிர்வாக அலுவலர் கண்ணன் அவர்களை அழைத்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **பார்வைமகஜரிலுள்ள முதல் கையெழுத்து அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் நடவடிக்கைக்காக எதிரியை வனச்சரக அலுவலகம் அழைத்து வரப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.447/2022

**Depositions of PW- 4**

| Name | திரு.பெரியசாமி | Occupation | வனவர் |
|---|---|---|---|
| Father’s name | வேலுச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.

16.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கான்சாபுரம் பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் ரெங்கர்தீர்த்தம் பீட் வனக்காப்பாளராக இருந்தபோது கதிர்காமன் வனச்சரக அலுவலர், பாரதி வனவர், லட்சுமி வனக்காப்பாளர், ரெங்கர் கோவில் பீட் ஓட்டுநர் உரிமம் கொண்ட வனக்காப்பாளர் கடற்கரைவேல், மற்றும் வெங்கடேஸ்வரபுரம் கிராம நிர்வாக அலுவலர் கண்ணன் ஆகியோர் இரவு சுமார் 10.30 மணியளவில் கருத்தப்பாண்டி என்பவர் குத்தகை எடுத்து விவசாயம் செய்து வந்த தோப்பிற்கு வனத்துறையின் மோப்பநாய் சிமியுடன் சென்று சோதித்தபோது அவருக்கு சொந்தமான இடத்தில் அழுகிய நிலையில் 3 உடும்பு தோள்களும் 2 உடும்பு தலைகளும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட நபரும் உடனிருந்தார். அதன்பின்னர் மோப்பநாயுடன் அலுவலகம் வந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இடதுபக்க இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வைமகஜரிலுள்ள இடதுபக்க இரண்டாவது கையெழுத்து அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள மூன்றாவது கையெழுத்து அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.